# கணக்காய்வு நிறுவனங்களிடமிருந்து ஆர்வ வெளிப்பாட்டை கோருதல்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகளின் வெளிவாரி கணக்காய்வாளர்கள் குழாத்திற்கு தெரிவுசெய்தல்

1. 2027.01.01ஆம் திகதியிலிருந்து கணக்காய்வுகளை மேற்கொள்வதற்காக நிதிக் கம்பனிகளின் வெளிவாரி கணக்காய்வாளர்கள் குழாத்தினை மீளாய்வுசெய்வதற்கு இலங்கை மத்திய வங்கியின் ஆளும் சபை தீர்மானித்துள்ளது.
2. குறைந்தபட்ச தகைமைப் பிரமாணங்களைப் பூர்த்திசெய்கின்ற எந்தவொரு கணக்காய்வு நிறுவனமும் குறித்துரைக்கப்பட்ட வேண்டப்படும் தகவல்களுடன் முறையாக பூர்த்திசெய்யப்பட்ட ஆர்வ வெளிப்பாட்டை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர், இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01 என்ற முகவரிக்கு 2026.03.06 ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கை நேரப்படி பி.ப 4.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கையளிக்கலாம்.
3. ஆர்வ வெளிப்பாட்டை சமர்ப்பிப்பதற்கான குறைந்தபட்ச தகைமைப் பிரமாணங்கள் பின்வருமாறு:

அ. நிறுவனமானது இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தில் பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன் விண்ணப்பிக்கும் திகதியிலுள்ளவாறு குறைந்தது 10 வருட காலத்திற்குத் தொடர்ச்சியான தொழில்புரியும் உரிமப்பத்திரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

ஆ. கணக்காய்வு நிறுவனம், இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் மூத்த உறுப்பினர்களாக அல்லது இணை உறுப்பினர்களாகவிருக்கின்ற அத்துடன் நிறுவனத்தின் செயற்பாடுகளில் முழுநேர அடிப்படையில் ஈடுபடுகின்ற குறைந்தபட்சம் 5 பங்காளர்களை கொண்டிருக்க வேண்டும்;

இ. நிறுவனம், கணக்காய்வு நிறுவனத்தின் பங்காளர்கள் தவிர்ந்து முழுமையான தொழில்சார் தகைமைபெற்ற குறைந்தது 10 ஊழியர்களையும், மொத்தமாக குறைந்தபட்சம் 25 ஊழியர் பலத்தையும் கொண்டிருக்க வேண்டும்;

ஈ. நிறுவனமானது, தர முகாமைத்துவம் தொடர்பான இலங்கைத் தரநியமம் 1 (SLSQM 1) மற்றும் தர முகாமைத்துவம் தொடர்பான மீதான இலங்கைத் தரநியமம் 2 (SLSQM 2) ஆகியவற்றுடன் இணங்கியிருத்தல் வேண்டும்;

உ. நிதிக் கம்பனிகளின் பாதுகாப்பு மற்றும் ஆற்றல்வாய்ந்ததன்மை ஆகியவற்றை மையப்படுத்திய ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த இடர்நேர்வு என்பவற்றின் அடிப்படையில் கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கான இயலுமையை நிறுவனம் கொண்டிருக்க வேண்டும்;

ஊ. நிறுவனம், கணினி உதவியுடனான கணக்காய்வு நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கான இயலுமையைக் கொண்டிருக்க வேண்டும்; அத்துடன்

எ. நிறுவனமானது, அதன் நேர்மைத்தன்மையை பாதிக்கக்கூடிய வகையிலான கடுமையான தவறுகள் அல்லது முறைகேடான நடத்தைகள் தொடர்பில் நீதிமன்றமொன்றினால் அல்லது எவரேனும் ஒழுங்குபடுத்துனரால் குற்றவாளியாகக் காணப்படாதிருத்தல்.

4. ஆர்வ வெளிப்பாட்டிற்கான படிவத்தை www.cbsl.gov.lk என்ற இணையதள இணைப்பில் பெற்றுக்கொள்ளலாம்.
5. ஆர்வ வெளிப்பாட்டிற்கான மதிப்பீடானது, கணக்காய்வு நிறுவனத்தின் அனுபவம், பங்காளர்களின் தகைமை மற்றும் அனுபவம், ஊழியர் பலம் மற்றும் தகைமைகள், மற்றும் நிறுவனத்தின் தொழில்நுட்பத் தேர்ச்சிகள் போன்ற பிரமாணங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.
6. இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகளின் வெளிவாரி கணக்காய்வாளர்கள் குழாத்தைத் தெரிவுசெய்வதற்கான இறுதித் தீர்மானத்தை எடுக்கும் அதிகாரத்தை இலங்கை மத்திய வங்கியின் ஆளும் சபை கொண்டிருக்கும்.

SCAN QR CODE


பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01.

011-2477504 011-2477738 dsnbfi@cbsl.lk http://www.cbsl.gov.lk